1990 மே, 7]

திரு. இரா. மதிவாணன் : தலைவர் அவர்களே, பழவேற்காட்டில் உள்ள அந்த 9 குப்பத்து மக்களிடமும் நானும் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களும் பேசி சமரசம் செய்து வைத்தோம். அதிலிருந்து இன்று வரை அவர்கள் ஒற்றுமையாக இருந்து வருகிறார்கள். அவர்கள் மீது போடப்பட்ட அந்த வழக்கை அரசு திரும்பப் பெறுமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, அது குறித்து தனியாக தெரிவிப்பாரேயானால் அதனை ஆய்வு செய்து பரிசீலனை செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : தலைவர் அவர்களே, சென்னை, செங்கை அண்ணா மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் தொழிற் சாலைகளிலிருந்து நச்சுத் தன்மை வாய்ந்த கழிவுநீர் கடலில் கலப்பதால் மீன் வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே அரசிடம் இறால் வளர்ப்புத் திட்டம் உள்ளதால் மீனவர்களுக்கு அந்தத் திட்டத்தை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

செயற்கை முறை இன விருத்தி

4181—திரு. க. வெ. வீ. இராசாமாணிக்கம்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் செயற்கை முறை இனவிருத்தி மூலம் உயர்தர ஆடுகளை இனவிருத்தி செய்யும் வகையில் ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து கிடாக்களை இறக்கு மதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செங்கை சிவம் : தலைவர் அவர்களே, நம்முடைய காட்டுப்பாக்கம் ஆராய்ச்சி மையத்தில் ஆடுகளை மிக அதிகமாக எடையுள்ள ஆடுகளை இனப்பெருக்கம் செய்யப்படுகின்ற ஒரு

சூழ்நிலை இருக்கிறது. ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் பண்டிகை தினங்களில் குறிப்பாக ரம்சான், பக்ரித் போன்ற பண்டிகை தினங்களில் குவைத், துபாய் போன்ற நாடுகளுக்கு ஆடுகளை அதிகமாக ஏற்றுமதி செய்கிறார்கள். அதே போன்று தமிழ்நாட்டிலும் இனப்பெருக்கத்தை செய்து— ஆடுகள் இனப் பெருக்கத்தை செய்து—அதிகமான அளவிற்கு மேலை நாடுகளுக்கு ஆடுகளை ஏற்றுமதி செய்யும் எண்ணம் அரசக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர் களே, தமிழ்நாடு அரசின் மூலமாக ஆடுகள் வளர்க்கின்ற பல் வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலேதான் இந்த ஆண்டிலே கூட ஐரோப்பிய பொருளாதார நிதியுதவி திட்டத்தின் கீழ் 6 மாவட்டங்களிலே செயல்படுகின்ற ஒரு திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனை.

5533—திரு. சி. கோவிந்தராஜன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவிக்கு விடையளிப்பாரா:

நெல்லிக்குப்பம் நகரத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்கும் செய்ற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

9-50 மணி

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகரம் கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேர் கொண்ட ஒரு முனிசிபல் நகரம். அங்கே கால் நடைகள் ஏராளமாக இருக்கின்றன. கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதற்கு அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டு இருக்கிற காரணத்தால் அரசு மறு பரிசீலனைச் செய்து அங்கே ஒரு கால்நடை மருத்துவமனையை ஏற்படுத்த ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.